[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்] [1981 ஏப்ரல் 4

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

''கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1981) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

6. அறிவிப்புகள்

அ. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு 1981, (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

இ. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு 1981

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''198 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். கோவை நகராட்சி, மாநகராட்சி ஆக்கப்படுவதை நான் மனதார வர

---

*1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ' ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது